## இணைப்பு படிவம் – 1.

# திருநெல்வேலி இணைஆணையர் மண்டல திருக்கோயில்கள் முக்கிய திருவிழாக்கள் நாட்காட்டி

## மாவட்டத்தின் பெயர் – தூத்துக்குடி

| வ.எண் | திருக்கோவிலின் பெயர் மற்றும் தலவரலாறு/ அமைவிடம் சுருக்கமாக | முக்கிய திருவிழா க்கள் மாதம் வாரியாக | திருவிழாக் களின் முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக | திருவிழாவின் சிறப்புகள் சுருக்கமாக | தொலை பேசி எண்கள் | Website & email id |
|---|---|---|---|---|---|---|
| 1. | அருள்தரும் முத்தாரம்மன் திருக்கோயில் குலசேகரன்பட்டணம். அம்மையும் அப்பனும் ஒரே பீடத்தில் அமர்ந்திருந்து அருள்பாலிக்கும் திருத்தலம். 10 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்ளும் தசரா பெருந்திருவிழா இத்திருக்கோயிலின் முக்கிய திருவிழா ஆகும். இத்தலம் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூருக்கு தெற்கே 12 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது | இல்லை | இல்லை | இல்லை | 04639 – 250355 | வலைதளம் www.kulasaimutharamman temple.tnhrce.in மின்னஞ்சல் gnanamutharamman@gmail.com |
| 2. | அருள்மிகு சுவாமி சிதம்பரேஸ்வரர் வகையறா திருக்கோயில் செட்டியாபத்து. இத்திருக்கோயில் சுமார் 400 ஆண்டுகளுக்கு முற்பட்டது மக்களின் வேண்டுதல்களை நிறைவேற்றி அவர்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக நிற்கும் தெய்வங்கள் வாழும் இத்திருக்கோயில் 'செட்டியாபத்து கோயில்' என்றும் 'திருமேனி கோயில்' என்றும் 'ஐந்து வீட்டு சுவாமி கோயில்' என்றும் அழைக்கப்பெற்று வருகிறது இத்திருக்கோயில் சுவாமிகளுக்கு தங்கள் முறைப்படி | சித்திரை 18 முதல் 24 முடிய (01.05.2016 முதல் 07.05.2016 முடிய) | சித்திரை 23 ம் தேதி அன்ன முத்திரி (06.05.2016) | இத்திருவிழாவே இத்திருக்கோயிலின் முக்கிய திருவிழா ஆகும். இதில் தமிழகம் முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வர். ஆறாம் திருநாளன்று நடைபெறும் அன்னமுத்திரி பூசை | 04639 – 250630 | வலைதளம் www.swamychidambareswarartemple.tnhrce.in மின்னஞ்சல் scgotc@gmail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அசைவ உணவினை சமைத்து படைத்து வழிபடுகின்றனர். இத்திருக்கோயிலில் சித்திரை மாதம் 18 ம் தேதி முதல் 24ம் தேதி முடிய நடைபெறும் சித்திரைபூசை பெருந்திருவிழாவும் தை மாதம் 5 ம் தேதி முதல் 8ம் தேதி முடிய நடைபெறும் தை பூசை திருவிழாவும் பிரசித்தி பெற்றது. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூருக்கு தென்மேற்கே சுமார் 16 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. | | | இத்திருவிழாவின் சிறப்பம்சமாகும். இதில் சுவாமிக்கு படைக்கப்படும் நெய்வேத்திய படைப்பு சாதம், பூசை முடிந்தவுடன் பனை ஓலைப் பெட்டியில் பக்தர்களுக்கு விநியோகிக்கப்படும். இப்பிரசாதத்தை பக்தர்கள் இருப்பிடம் கொண்டு சென்று உலர வைத்து நோயாளிகளுக்கு ஆகாரம் கொடுக்கும் போது அன்னத்தில் ஓர் அன்னத்தை சேர்த்து கொடுத்தால் நோய் நீங்கிவிடும் என்ற திடமான நம்பிக்கை பக்தர்களிடம் உள்ளது. | | |
| 3. | அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோயில், தேரிகுடியிருப்பு.<br>மந்திர சக்தியால் மற்றவர்களை மயக்கி திருட வந்த கள்ளனை பிடித்து கைகளைக் கட்டி அய்யனார் முன்பு கொண்டு வந்து நிறுத்தினார்கள் அய்யனார் அவன் திருடியது உண்மை என்பதை அறிந்து அவனை சிரைசேதம் செய்து விட ஆணையிட்டார். இதுவே கள்ளர் வெட்டு திருநாளாக கொண்டாடப்பட்டு வருகிறது. கார்த்திகை 1 – ம் தேதி தொடங்கி 30 – ம் நாளில் நிறைவு பெறும் இத்திருவிழாவின் இறுதி நாளன்று மாலையில் லட்சக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் கள்ளர் வெட்டு திருவிழா நடைபெறும். பங்குனி உத்திர திருவிழாவும் சிறப்பாக நடைபெறும். தூத்துக்குடி மாவட்டம், | இல்லை | இல்லை | இல்லை | 04639 – 232530 | வலைதளம்<br>www.karkuveliyanatemple.org<br><br>மின்னஞ்சல்<br>karkuvelayanartemple2014@gmail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | திருச்செந்தூருக்கு மேற்கே 13 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. | | | | | |
| 4. | அருள்மிகு கள்ளபிரான்சுவாமி திருக்கோயில், திருவைகுண்டம் | மார்கழி சித்திரை | வைகுண்ட ஏகாதசி திருத் தேரோட்டம் | | 04630 256476 | navathirupathitemple.tnhrce.in |
| 5. | அருள்மிகு மாயக்கூத்தர் திருக்கோயில், பெருங்குளம், திருவைகுண்டம் | மார்கழி பங்குனி | வைகுண்ட ஏகாதசி கருட வாகனம் | | 04630 256476 | navathirupathitemple.tnhrce.in |
| 6. | அருள்மிகு வெங்கிடாஜலபதி திருக்கோயில், கருங்குளம், திருவைகுண்டம் | சித்திரை | சித்ரா பௌர்ணமி | | 04630 256476 | navathirupathitemple.tnhrce.in |
| 7. | அருள்மிகு சுந்தரபாண்டீஸ்வரர் சாஸ்தா திருக்கோயில், செய்துங்கநல்லூர், திருவைகுண்டம் | பங்குனி உத்ரம் | பங்குனி உத்ரம் | | 04630 256476 | |
| 8. | அருள்மிகு கைலாச நாதசுவாமி திருக்கோயில் மற்றும் உதய மார்த்தாண்ட கட்டளை, திருவைகுண்டம் | ஐப்பசி சித்திரை | வைகுண்ட ஏகாதசி திருத் தேரோட்டம் | | 04630 256476 | navathirupathitemple.tnhrce.in |
| 9. | அருள்மிகு பொய்சொல்லாமெய்யன் சாஸ்தா திருக்கோயில், தோழப்பண் பண்ணை, ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி | பங்குனி உத்ரம் | பங்குனி உத்ரம் | | 04630 256476 | |
| 10. | அ.மி ஆதிநாதர் ஆழ்வார் திருக்கோயில் ஆழ்வார்திருநகரி, திருச்செந்தூர்வட்டம் தூத்துகுடி மாவட்டம்.<br>தலவரலாறு சுருக்கம்<br>பாண்டியநாட்டில் ,தாமிரபரணிக்கரையில் , குருகூரில் (தற்போது ஆழ்வார் திருநகரி ) வேளாளர் மரபில் காரியார்– உடைய நங்கை தம்பதிக்கு மகனாக வைகாசி விசாக நட்சத்திரத்தில் பிறந்த குழந்தை , பாலுண்ணுதல் , அழுதல் போன்ற எந்த | அ.மி ஆதிநாதர் ஆழ்வார் சித்திரை பிரம்மோற் சவம் | கருடசேவை 14.04.2016 | — | 04639 273607 | 1.www.navathirpathitemple.tnhrce.in<br>2.athinatharalwartemple@gmail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | செயலும் செய்யாமல் இயற்கைக்கு மாறாக இருந்ததால், மாறன், சடகோபன், பராங்குசன் என பெயரிட்டு வளர்த்தனர் . குழந்தையின் நிலை கண்டு ஆதிநாதர் கோயிலுக்கு கொண்டு சென்றபோது ,குழந்தை தவழ்ந்து சென்று அங்கிருந்த புளிய மரப் பொந்தில் ஒளிந்து கொண்டு 16 ஆண்டுகள் தவமிருந்தது. தவத்தின் ஒளி காசியில் இருந்த மதுர கவி ஆழ்வாருக்கு தெரிய அங்கிருந்து கிளம்பி குருகூர் (தற்போது ஆழ்வார் திருநகரி ) வந்து, தம்மை சீடராக ஏற்று கொள்ள வேண்டி, சடகோபரும் சீடனாக ஏற்று திருவாய்மொழி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஆகியவற்றை உபதேசித்தார். இவையே நாலாயிரம் திவ்விய பிரபந்தமாகும். சடகோபர் நம்மாழ்வார் என அழைக்கப்படுகிறார். நம்மாழ்வார் வேதம் தமிழ் செய்த மாறன் என்ற புகழப்படுகிறார். | | | | | |
| 11. | அருள்மிகு பூவனநாதசுவாமி திருக்கோயில், கோவில்பட்டி, தூத்துக்குடிமாவட்டம்<br><br><u>தலவரலாறு</u><br>சிவபெருமான் திருமணத்தின் போது வடபுலம் தாழ்ந்து தென்புலம் உயர்ந்த நிலையில், உலகை சமன் செய்யும் பொருட்டு இறைவன் ஆணைப்படி அகத்தியர் பொதிகை நோக்கி பயணமானார். வழியில் பிரமஉறத்தியம் போக்க அகத்தியர் பொன்மலை களாவனத்தில் எழுந்தரு ளியுள்ள பூவனநாதரைப் பூஜித்து பிரமஉறத்தியம் நீங்கப் பெற்றார். பொன்மலை முனிவர்கள் வேண்டு கோளுக்கு இணங்க அகத்தியர் தீர்த்தத்தை ஏற்படுத்தினார்<br>இத்திருக்கோயில் இராமபிரான் சிவவழிபாடு செய்த பெருமை உடையது | பங்குனி பெருந் திருவிழா | பங்குனி மாதம் கடைசி நாள். தேர்த் திருவிழா 13.04.2016<br><br>சித்திரை மாதம் 1ம் தேதி தீர்த்தவாரி திருவிழா 14.04.2016<br><br>சித்திரை மாதம் 2ம்தேதி தெப்பத்திருவிழா 15.04.2016 | மேற்படி நாட்களில் சுற்று வட்டார பொதுமக்கள் சுமார் 50000 பக்தர்கள் தினசரி சுவாமி –அம்பாளை தரிசனம் செய்து அருள் பெறறு செல்வார்கள் | 04632 220248 | www.kovilpatti poovanathaswamy.tnhrce.in<br><br>shenpoovanam@gmail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அமைவிடம்<br>மதுரையில் இருந்து தெற்கே 100கி.மீட்டர் தொலைவிலும், திருநெல்வேலியிலிருந்து வடக்கே 58 கி.மீட்டர் தொலைவிலும் தூத்துக்குடியிலிருந்து 58 கி.மீட்டர் தொலைவிலும் கோவில்பட்டி அமைந்து உள்ளது. திருக்கோயிலிருந்து 1கி.மீட்டர் தொலைவில் கோவில்பட்டி புகைவண்டி நிலையம் அமையப் பெற்றுள்ளது. | ஐப்பசி திருக்கல்யாண திருவிழா | ஐப்பசி மாதம் 11ம் தேதி 27.10.2016 திருக்கல்யாண திருவிழா | பக்தர்கள் சுவாமி –அம்பாள் திருக்கல்யாண விழாவில் தரிசனம் செய்து அருள் பெற்று செல்வார்கள் | | www.kovilpatti poovanathaswamy.tnhrce.in<br><br>shenpoovanam@gmail.com |
| 12. | சங்கரராமேஸ்வரர் திருக்கோயில், தூத்துக்குடி. | சித்திரை<br><br>ஐப்பசி | தமிழ் வருடப் பிறப்பு<br><br>ஐப்பசி திருக் கல்யாணம் 10 நாட்கள் கந்த சஷ்டி ஆரம்பம் | | | |
| 13. | அருள்மிகு சோமநாத சுவாமி திருக்கோயில், ஆத்தூர் , திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம். | பங்குனி | பங்குனி உத்திரவிழா 10 நாட்கள் | | | |

ஒம்/ சி.இலட்சுமணன்
இணை ஆணையர்

/உண்மைநகல் / உத்தரவுப்படி/

25/4/16.
மேலாளர்

25.4.16.